தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்

மலர்-4 திருவள்ளுவராண்டு-2017-பங்குனி-1 14-3-1986 இதழ்-12

## சிறந்த நூல்களுக்கான பரிசுகள்

புத்தம் புதிய துறைகளில் தமிழ் வளம்பெறும் பொருட்டும், தமிழ்ப் பண்பாடு, இலக்கியம் பற்றிய செய்திகளை உலக மொழியிற் படைத்தலை ஊக்குவித்தற்கும், 1985-86இல் கீழ்க்காணும் நூல்கள் ஒவ்வொன்றிற்கும் உரூ.5000/- (ஐயாயிரம்) வழங்குவதென வல்வநர்குழு பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பரிசளிக்க முடிவு செய்துள்ளது.

1. <u>குவெட்டி ஜாஸ்மினு</u> (சங்கத் தமிழ்ப் பாக்கள்) அகம், புறம் 200 பாடல்கள் 'செக்' மொழி பெயர்ப்பு - கமில் சுவலபில், நெதர்லாண்ட்ஸ்.
2. <u>நம்பியண்ணன் - ஓர் ஆய்வு</u> - கன்னட மொழியில் சுந்தரர் பற்றிய ஆய்வு. டாக்டர் வித்தியாசாகர், பங்களூர் பல்கலைக் கழகம், பங்களூர்.
3. அ) <u>நடைமுறைத் தொழில் நுட்ப எந்திரவியல்</u> (பொறியியல்)
திரு அ.மி.க்ரிசீன், திரு இ.ச.நஊமவ்,
தமிழாக்கம் : எஸ்.எம்.காசிம் முகம்மது.
வெளியிட்டோர் : நியூ செஞ்சுரி புக் உறவுஸ், சென்னை.

ஆ) <u>டாக்டர் பேசுகிறார்</u> (மருத்துவம்)
டாக்டர் பி.எம்.ரெக்ஸ்
வெளியிட்டோர் : வானதி பதிப்பகம், சென்னை.

(இவ்விருநூல்களுக்கும் உரூ.5000/-பரிசு பகிர்ந்து அளிக்கப்படுகிறது).

4. அ) <u>உலகத் தமிழர்</u> (வாழ்வியல்)
திரு இர.ந.வீரப்பன்
வெளியிட்டோர் : புரட்சிப்பண்ணை, சேலம்.

ஆ) <u>சவகர்லால் நேரு</u> (வாழ்வியல்)
திரு அ.கோரெவ், திரு வி.ஸிம்யானின்.
தமிழாக்கம் : திரு ந.தர்மராஜன்.
வெளியிட்டோர் : நியூ செஞ்சுரி புக் உறவுஸ், சென்னை.

(இவ்விருநூல்களுக்கும் உரூ.5000/-பரிசு பகிர்ந்து அளிக்கப்படுகிறது).

5. <u>சித்திரப் பூத்தையல்</u> (நுண்கலைகள்)
வித்வான் வை. சரோஜினி.
வெளியிட்டோர் : நியூ செஞ்சுரி புக்உறவுஸ், சென்னை.
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் இந்நூலுக்கு முன்னரே உரூ. 2000/- பரிசளித்திருப்பதால் இப்போது உரூ. 3000/- வழங்கப்படுகிறது).
6. <u>தமிழர் இசை</u> (தமிழிசை)
டாக்டர் ஏ.என்.பெருமாள்.
வெளியிட்டோர் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
(தமிழ் வளர்ச்சி இயக்ககம் இந்நூலுக்கு முன்னரே உரூ. 2000/- பரிசளித்திருப்பதால் இப்போது உரூ. 3000/- வழங்கப்படுகிறது).

பரிசுகள் 22.3.'86 அன்று பேரவைக் கூட்ட நிகழ்ச்சிகளின்போது வழங்கப்பட உள்ளன.

## பன்னாட்டு, புத்தசமயக் கருத்தரங்கு

காஞ்சி தத்துவமையத்தில் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஆதரவில் 1986, மார்ச்சுத் திங்கள் 10-ஆம் தேதியிலிருந்து 16-ஆம் தேதிவரை ஒருவார, பன்னாட்டுத் தியான/சான்/செள்/ தந்திரவாதம் பற்றிய கருத்தரங்கு நடைபெறுகின்றது. அதில் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அறிஞர் பெருமக்கள் பலர் பங்கேற்று, தியானம் மற்றும் தந்திரவாத பௌத்தம் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கி வருகின்றனர். மேலும் சில சிறப்புரைகளுக்கும் ஏற்பாடாகியுள்ளது. இது இந்தியாவிலேயே தியான தந்திரவாத பௌத்தம் பற்றிய முதல் கருத்தரங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கருத்தரங்கை மார்ச்சு 10ஆம் தேதி தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ.அரங்கநாயகம் அவர்கள் துவக்கி வைத்துச் சிறப்பித்தார்கள்.

— இயக்குநர்,
தத்துவமையம்.

## கிறித்துவக் கருத்தரங்கு

கிறித்துவம் பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கு, காஞ்சிபுரம் தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவமையத்தில் 1986 சனவரி 24, 25 நாள்களில் நடைபெற்றது.




கருத்தரங்கில் முக்கியப் பொருளான 'மீட்பு' என்பதைப்பற்றிச் சுருக்கமாகத் தமது தொடக்கவுரையில் பேராயர் அருள்திரு முனைவர் துரைராஜ்பீட்டர் அவர்கள் எடுத்துரைத்தார். காலையில் மூன்று அமர்வுகளில் அருள்திரு முனைவர் ஜே.டி.கே.தானியேல், அருள்திரு முனைவர் தாமசு மண்ணுமேல், அருள்திரு முனைவர் டி.டபுள்யூ. ஏசுதாசு ஆகியோர்முறையே 'மீட்பர்–இயேசு', 'புனித சின்னப்பரின் மீட்புப் பற்றிய கருத்துக்கள்'., !மீட்புப் பற்றிய லூத்தரின் கருத்துக்கள்' என்ற தலைப்புகளில் தமது ஆய்வுரைகளை வழங்கினர்.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் அவர்கள் தலைமையில் தொடங்கிய பிற்பகல் நிகழ்ச்சியில் இரண்டு பேராளர்கள் அருள்தந்தை முனைவர் தனராஜ், அருள்திரு முனைவர் சேவியர் இருதயராஜ் ஆகியவர்கள் முறையே 'பழைய ஏற்பாட்டில் மீட்பு', 'மீட்புப் பற்றிய கிறித்துவ, சைவ சமயக் கருத்துக்கள்–ஒப்பீட்டு நோக்கு' என்ற தலைப்புகளில் தமது ஆய்வுரைகளை எடுத்தியம்பினர்.

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிக்கு அருள்தந்தை முனைவர் இராசமாணிக்கம் தலைமை தாங்கினார். அதில் அருள்தந்தை ஆரோக்கியதாசு, அருள்திரு சுவாமி விக்கரந்த் ஆகிய இரு அறிஞர்கள், 'விடுதலை இறையியல் சிந்தனைகள்', 'மீட்புப் பற்றிய கிறித்துவ, புத்த சமயக் கருத்துக்கள் – ஒப்பீட்டு நோக்கு' எனும் தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். பிற்பகலில் தத்துவ மைய இயக்குநர், முனைவர் கூ.ரா.நஞ்சுண்டன் அவர்கள் தலைமையில் அருள்தந்தை முனைவர் சாக்கோ வலிய வீட்டில், பேராசிரியர் சத்தியசாட்சி ஆகியவர்கள், 'மீட்புப் பற்றிய கிறித்துவ, சமண சமயக் கருத்துக்கள் – ஒப்பீட்டு நோக்கு', 'மீட்புப் பற்றிய கிறித்துவ– வைணவ சமயக் கருத்துக்கள் – ஒப்பீட்டு நோக்கு' ஆகிய கட்டுரைகளைப் படித்தனர்.

அருள்தந்தை முனைவர் இராசமாணிக்கம் அவர்களின் நன்றியுரையுடன் இரண்டாம் நாள் கிறித்துவக் கருத்தரங்கு இனிதே நிறைவு பெற்றது.

மற்றைச் சமயங்களைப் பற்றிய ஒப்பீட்டு ஆய்வும் ஒவ்வொரு ஆய்வுக்கட்டுரைக்குப் பிறகு நிகழ்ந்த கலந்து–ரையாடலும் கருத்தரங்கின் பெரு வெற்றிக்கு உதவின.

– இயக்குநர்,
தத்துவமையம்.

## பழந்தமிழ் இலக்கியத்தில் இசையமைப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இலக்கியத் துறை சார்பில் 1.3.'86 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

இரசிகமணி டி.கே.சி.இலக்கிய வட்டத்தைச்சேர்ந்த புலவர் ல. சன்முகசுந்தரம் அவர்களை மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்கள் அறிமுகம் செய்துவைத்தார். தம் அறிமுக உரையில் துணைவேந்தர் அவர்கள், சங்க இலக்கியத்தில் வழங்கிய செய்யுள்யாப்பு, பக்தி இலக்கியம் மலர்ந்த காலத்தில் இசையாப்பாக வளம் பெற்ற பாங்கினைத் தெளிவுறுத்தினார்கள்.

'பழந்தமிழ் இலக்கியத்தில் இசையமைப்பு' என்னும் பொருள் குறித்துப் புலவர் ல.சன்முகசுந்தரம் அவர்கள் உரை நிகழ்த்துகையில் சிலப்பதிகாரம், திருமுறைகள், முத்தொள்ளாயிரம், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களில் அமைந்துள்ள இசைக் கூறுகளைத் தமக்கேயுரிய பாங்கில் பாடிக் காட்டி விளக்கமும் வழங்கினார்கள். நாட்டுப்புறப் பாடல்களில் அமைந்துள்ள இசைத் திறத்தையும் அவர்கள் எடுத்துரைத்தார்கள். பின்னர், கலந்துரையாடல் நிகழ்ந்தது. முனைவர் சோ.ந. கந்தசாமி அவர்கள் நன்றிகூற, கூட்டம் இனிது நிறைவுற்றது.

– சோ.ந.கந்தசாமி,
இலக்கியத்துறை.

## நூலகத்திற்கு அன்பளிப்பு

சென்னை அண்ணாநகர் திரு ஆர். மாதவமேனன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு, மாத்ருபூமி அழ்ச்ச பதிப்பு, கேரள சப்தம் போன்ற மலையாள காலமுறை இதழ்கள்; அமுதசுரபி, தர்மசக்கரம், ஆரோக்கியம் ஆகிய தமிழ் காலமுறை இதழ்களின் முன் தொகுதிகள் பலவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவர்க்கு நன்றி.

## பாலைவனத்தில் புல் வளர்க்கும் திட்டம்

பாலைவனத்தில் மணல் மேடுகள் அடிக்கடி இடம் மாறுவதைத் தடுத்து நிறுத்த மத்திய ஆசிய வன இயல் ஆராய்ச்சிக் கழகம் ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்து இருக்கிறது. இது, மணல் மேடுகளில் பாலிமர் பசைப் பொருள்களைப் பயன்படுத்தும் முறையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்தப் பசைப்பொருளில் மணல் சிக்கிக் கொள்கிறது. ஒரு மணி நேரத்தில் 10 ஹெக்டேர் மணல் தரையில் இந்தப் பசையைக் கலக்கும் ஒருவாகனத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்தப் புதிய முறையைப் பயன்படுத்தி மத்தியஆசியாவில் கஜக்ஸ்தானில் சுமார் 20 இலட்சம் ஹெக்டேர் மணல் வெளியில், ஆடுகள் மேய்வதற்கான புல் பயிரிடப்படும். — நன்றி.

'சோவியத் சிறப்புக் கட்டுரைகள்'

## வட துருவத்தில் வாழும் தமிழர்

தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு சேசுதாசன் வட துருவத்தில் உறைநிலைக்குக் கீழே -30° குளிரில் கடந்த 17 ஆண்டுக் காலமாக 'ஃகை ஆர்க்டிக் இன்டர்நேசனல் எக்சுபுளோரர் சர்வீசசு லிமிடெட்' என்ற நிறுவனத்தை நடத்திவருவது வியப்புக்குரிய செய்தியாகும். திரு ஏசுதாசன்



சென்னை, கிறித்துவக் கல்லூரியில் பட்டம் பெற்று 'லார்சன் அண்ட் டுப்ரோ' நிறுவனத்தில் பணியேற்று, மேற்குசெர்மனியில் பொறியியல் கல்வி பயின்று, கனடா அரசின் வட துருவக் குடியமைப்புப் பொறியாளராகப்பதவி ஏற்றுப் பின்னர் 1969-ஆம் ஆண்டி-லிருந்து சொந்தமாகத் தொழில் நடத்தி வருகிறார்.

இவர் உள்ள ரெசல்யூட் என்ற பகுதி, வட துருவத்தின் வாயில் என்று அழைக்கப்படும் பகுதியாகும். இங்கிருந்து வட துருவம் ஆயிரம் கல் தொலைவு ஆகும். இவருடைய பணி வடதுருவத்திற்குப் பயணம் செய்யும் பயணிகள், விந்தைச் செயல் விரும்புவோர், ஆராய்ச்சியாளர் ஆகிய பலதரப்பட்டவர்களுக்கும், பல நாட்டினர்க்கும் உடை, தங்குவதற்கான தட்டுமுட்டுப் பொருள்கள், தூங்கும் பைகள், வெப்பக் காற்றுக் கருவிகள் கொடுப்பதுடன் எஃச்கிமோ வழிகாட்டிகளையும் அனுப்பி வைப்பதாகும்.

இங்கு மருத்துவ வசதிகள் என்பது ஆயிரம் கல் தொலைவு சென்றால்தான் கிடைக்கும். ஆனால், உடல் நலம் கெடுவதற்கு வாய்ப்பே இல்லையாம்; ஏனென்றால் கிருமிகளுக்கே அங்கு இடமில்லை. இவர் தம்முடைய கனடா நாட்டு மனைவியுடன் கடும்குளிரில் செய்துள்ள சாதனைகள் பெருமையளிப்பனவாகும். சார்லசு இளவரசர் வருகையின் போது அவருக்குத் தேவைப்பட்ட 'இக்ளூ' கட்டிக் கொடுத்ததையும் இந்திய உணவு படைத்ததையும் பெருமையுடன் நினைவுகூர்கிறார். நெயில் ஆம்ஸ்ட்ராங், எட்மண்ட் ஃஹில்லரி, முதலியவர்கள் வருகை தந்ததையும் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கிறார்.



இத்தகைய கடும்குளிரை அங்கேயுள்ளவர்கள் எப்படித் தாங்குகிறார்கள்? எஃச்கிமோக்கள் ஒவ்வொருவரும் ஏறத்தாழ இரண்டரை கிலோ இறைச்சியைப் பச்சையாக உண்கிறார்கள். அதனுடைய அதிகமான கொழுப்புச் சக்தியே குளிரைத் தாங்கும் வலிமையை அவர்களுக்குக் கொடுக்கிறது.

செடிகொடிகள் துருவப் பகுதியில் உண்டா? மண்ணே இல்லாத பகுதி அது. அரையடிக்குக் கீழேயுள்ள பனிக்கட்டி நிலைப்பானது. இங்கு ஆண்டில் மூன்று மாதங்கள் கதிரவன் தலைக்கு மேல் நிலைப்பாக இருக்கும். மற்றொரு மூன்று மாதங்களில் தொடுவானத்தை விட்டு மேலே எழும்பிச் சுற்றிக் கொண்டே இருக்கும். கோடைக்காலத்தில் கப்பல் மூலம் அவர்களுக்கு வேண்டிய கட்டும்பொருள்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள இயலும். உணவுப் பொருள்கள் விமானம் மூலம் வந்து சேர்கின்றன.

மனித இனம் வாழ்வதற்கே அஞ்சக்கூடிய கடும் குளிர்ப் பகுதியாகிய வட துருவத்தில் குடியிருப்பதோடு, அங்குச்செல்பவர்களுக்கு வழித்துணை போன்ற உதவியையும் பிற உதவிகளையும் செய்து வரக்கூடிய திரு சேசுதாசனின் பணி, தமிழர்களுக்குப் பெருமை தருவதாகும். — நன்றி!

இந்தியன் எக்ஃசுபிரசு.

## கணிப்பொறியின் நூலகப் பயன்பாடு

பல்கலைக் கழக நல்கைக் குழுவின் ஆசிரியர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் நூலகத் துணைஇயக்குநர் திரு த. பத்மநாபன், திருவேங்கடவன் பல்கலைக் கழக நூலகவியல் துறையில் 12.2.'86 முதல் 15.2.'86 வரை கணிப் பொறியின் நூலகப் பயன்பாடு குறித்துச் சொற்பொழிவாற்றினார்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்
திங்களிதழ்
பதிவன் 15033/82X7

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

## தமிழில் மருத்துவச் சொற்பொழிவு

இந்திய மருத்துவக் கழகத் தமிழ்நாட்டுக் கிளையின் 39ஆவது மாநாட்டில் டாக்டர் சு. நரேந்திரன் அவர்கள் 'குடல்புண் மருத்துவத்தின் புதிய கருத்துக்கள்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு முதல் முறையாகத் தமிழில் நிகழ்த்தினார்கள்.

## புதிய ஆட்சிக் குழு உறுப்பினர்

தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தமிழ் எழுத்தாளர் முனைவர் (திருமதி) கே. திரிபுர சுந்தரி (இலட்சுமி) உறுப்பினராகப் பல்கலைக்கழக வேந்தரால் பதவியமர்வு செய்யப்பட்டுள்ளார்கள். இவருடைய பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும்.

## புதன் வட்ட நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 19.2.'86 | திரு ஈழவேந்தன் | 'ஈழத் தமிழினத்தின் வரலாறு – இன்றைய நிலை, எதிர்காலம்' |
| 26.2.'86 | முனைவர் து. சீனிச்சாமி | 'மரபும் தனி நபர் திறனும்: டி.எஸ். எலியட்' |
| 19.3.'86 | திரு ர. சே. ராசன் | 'மெக்லாரென் திரைப் படங்கள் வழி திரைப் படத் திறனறிதல்' |

> நூலகம் வீட்டு விளக்கம்
> நூல் வாங்குதல் நல்ல பழக்கம்

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

### காசநோய்

அ. கதிரேசன்

காச நோயின் விவரங்களைத் தாம் மொழியில் தெரிந்துகொண்டு பாதுகாப்புடன் வாழ்வதற்கு வழி செய்வது இந்நூல். மருத்துவப் பாட நூல்.

திம்மி 1/8 பக்கங்கள்: 329

விலை உரு. 115/-

### தஞ்சாவூர் மாவட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலிகைகள் ஓர் ஆய்வு

ஜ. சாதிக்
பொ. சுரேந்திரகுமார்

கும்பகோணம் வட்டத்தில் பயன்படுத்தப் படும் மூலிகைகள் பற்றிய ஒரு கள ஆய்வு நூல். மருந்துகளை உட்கொள்ளும் முறைகளும் விவரக் குறிப்புகளும் உள்ளன.

திம்மி 1/8 பக்கங்கள்: 79

விலை உரு. 22/-

### மர இனப் பெயர்த் தொகுதி

பெ. மாதையன்
எச். சித்திரபுத்தன்

ஒரு பொருள் பல சொல் என்ற அமைப்பில் மர இனப் பெயர்ச் சொற்கள் இவ்வகராதியின்கண் திரட்டிக் கொடுக்கப் பெற்றுள்ளன.

கிரவுன் 1/4 பக்கங்கள்: 555

விலை உரு. 200/-

### உடல், இசை, ஒருங்கிணைப்பு

சே. இராமானுசம்
கு. முருகேசன்

மரபு வழியில் புதியதொரு நாடக மேடைப் படைப்பு மொழியை உருவாக்கத் தோன்றிய நூல். இது ஒரு நாட்பணிக் குறிப்பு.

திம்மி 1/8 பக்கங்கள்: 95

விலை உரு. 20/-

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.